# அரபு இலக்கியக் கவிதைகளின் தோற்றமும் பொருள் மரபும் - ஓர் ஆய்வு

*ஏ.எல்.எம்.முஜாஹித், சிரேஷ்ட விரிவுரையாளர், இஸ்லாமிய கற்கைகள் துறை,*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை*
*+94712135555, mujahidm@esn.ac.lk*

## அறிமுகம்

அரபுக் கவிதைகள் எக்காலப்பகுதியில் முதன்முதலில் தோன்றின என்று அறிவதற்கு போதிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லையாயினும், தனித்தனி கவிதைகள் மிக ஆரம்ப காலத்திலே தோன்றியிருக்க முடியும். ஆயினும் அப்துல் முத்தலிப் காலத்தில்தான் கஸீதாக்களின் உருவில் அரபுமொழியில் கவிதைகள் தோன்றியிருக்க முடியும் என்று HAR. கிப் என்பவர் தனது அரபு இலக்கியம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்படி கி.பி ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டளவில் கவிதைகள் தோன்றின என்று கருத இடமுண்டு. இக்காலத்தில் தோன்றிய கவிதைகளின் மொழிநடை, பொருளமைதி, இலக்கிய மரபு, சொல்வளம் என்பவற்றை கொண்டிருப்பதானது இவை நீண்ட கால வளர்ச்சியின் பின் தோன்றியவை என்று கருத இடமளிக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு அரபுக் கவிதைகளின் தோற்றமும் பொருள் மரபும் எனும் பொருண்மையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## அரபு இலக்கியத்தில் கவிதைகளின் வகிபங்கு

அரேபியாவில் கவிதைகள்தான் கோத்திரங்களின் புகழை ஓங்கச் செய்யும் ஊடகமாக இருந்தன. ஆதலால்தான் அராபியர் தம்கோத்திரத்தின் புகழை, பரம்பரையின் தூய்மையை, குலப் பெருமையை கவிதைகள் வாயிலாக வெளிப்படுத்தினர். கோத்திரம் ஒன்றில் கவிஞன் ஒருவன் தோன்றினால் முரசு அடித்து விழா எடுத்தல், இனிய குரலில் பாடகர்கள் பாடி வரவேற்றல், கோத்திரத்தின் தலைமைத்துவத்துக்கு அவர்களை நியமித்தல், அவர்களின் கவிதைகளை க..பாவில் தொங்கவிட்டு கௌரவித்தல் போன்றவையூடாக கவிஞர்கள் கௌரவிக்கப்பட்டதால் கவிஞர்கள் அக்காலத்தில் சிறப்பு நிலையை எய்தியிருந்தனர்.

குழுவின் பலம், செல்வாக்கு என்பன கவிஞர்களது கரங்களிலேயே தங்கியிருந்தன. ஆர். ஏ. நிக்கல்சன் என்பவர் தனது The Literary history of the Arabs எனும் நூலில் இது பற்றி விளக்கும்போது ‘‘ஒரு கவிஞன் இருக்கிறான் என்பது பற்றி கேள்விப்பட்டதும் அக்கம்பக்கத்தில் இருப்போர் அவனது இருப்பிடம் போய் ஆரவாரம் செய்வர் ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தாலும், ஒருவர் கவிபாடும் ஆற்றலைப் பெற்றாலும் அரபிகள் அக்குடும்பத்தை கௌரவித்துக் கொண்டாடுவர்’’

அரேபியாவில் அடிமை நிலை இருந்ததால் அங்கு வர்க்க வேறுபாடுகள் காணப்பட்டன. வர்க்க வேறுபாடுகளை ‘‘ஸிஅருஸ்ஸிஆக்’’ எனப்படும் ஏழ்மைக் கவிதைகள் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றன. இவர்களது கவிதைகளின் உயிர்நாடியாக இழிசாதியினரின் அடிமை வாழ்க்கையும், சாபக்கேடும், ஏனைய மனிதர்கள் போன்று வாழ விரும்பும்

சமுதாயத்தின் நலிவுற்ற ஒரு பகுதியினரின் ஏக்கப் பெருமூச்சும், இவ்வாறு வாழ விடாது தடைபோடும் சதிகார உயர்குல சாதியினரின் மாற்றாந்தாய் போக்கும் அமைந்திருக்கின்றது. இவ்வநியாயத்தை ''ஷன்பாரா'' தனது கவிதைகளில் மிகவும் சாதுரியமாக எடுத்துக் கூறுகின்றார்.

அக்காலக் கவிதைகள் அரேபிய சமுதாயத்தில் செல்வப்பங்கீடுகளின் அசம நிலையையும் செல்வந்தர்கள் ஏழைகளை வதைப்பவர்களாக இருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றன. ஒருவரது செல்வம் அவரிடம் எவ்வளவு ஒட்டகைகள் இருக்கின்றன என்பதைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது.

> ''ஒட்டகம் அற்ற ஒரு கயிற்றைப் பார்க்கும்போது நானே எனது உள்ளத்தை பார்த்து வெட்கப்படுகின்றேன். நாட்டில் ஒட்டகை உடையவர்கள் அதிகமாக இருந்தாலும் தாழ்ந்த இவ்வடியேன் போய்க் கேட்பதற்கு வெட்கப்படுகிறேன்''

என்று ஒரு அரேபியக் கவிதை குறிப்பிடுகின்றது.

அன்றைய அரேபிய சமுதாயங்களில் எந்த அளவுக்கு வர்க்க பேதம் உக்கிரமடைந்திருந்தது என்பதை உர்வது பின் அல்வர்த் என்பவரது பின்வரும் கவிதை சுட்டிக்காட்டுகின்றது.

> ''இப்பூமியில் சுமை ஏற்றப்பட்ட ஒட்டகைகளுடன் போகும் எனது பயணமானது ஏழைகளை வதைப்போராக இருக்கும் ஒட்டகப் பணக்காரர்களை ஒரு நாள் தாக்கச் செய்யும்''

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமான இவ்விடைவெளியினால் தாழ் சாதியினரை அவர்கள் அழித்தொழிக்க முற்படுகின்றனர். இதை அவர்கள் எதிர்ப்பது பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறது.

> ''ஸ.்.தூக் எனும் ஏழை சுடர்விட்டெரியும் ஒளியின் பிரகாசத்தை ஒத்த முகம் உடையவன். தமது பகைவர்களை ஒட்டகையைக் கலைத்து விடுவது போன்று கலைத்து விடுபவன். அவர்கள் தூரத்தில் இருந்தால் நெருங்க மாட்டார்கள். மறைந்திருப்போரையும் இவன் பார்க்கக் கூடியவன். மரணத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவன். ஆனால் அது அவசியப்படாது இருந்தால் மிகவும் நல்லது.''

பாலைவனத்தின் தனிமையை உணரும் ஏழை விழித்துக் கொண்டே உறங்கி யுத்தம், போராட்டம் பற்றியே கனவு கண்டு கொண்டிருக்கிறான். உணவைப் பற்றியோ, உறையுளைப் பற்றியோ, உடையைப் பற்றியோ இவனுக்கு சிந்தனை இல்லை. பட்டினியைப் பொறுத்துக்கொள்ளும் இவனுக்கு மரணம் கட்டாயம் வந்தே தீரும் என்பது தெரியும். ஆனால் இம்மரணமானது அராஜகத்திற்கு எதிரான போராட்டத்திற்கு மத்தியிலேயே ஏற்பட வேண்டும் என்பது இவனது விருப்பம். இதற்காக இவர்கள் அயராது பாடுபட்டனர் எனும் கருத்து பின்வரும் பாடல் அடிகளில் தொனிக்கிறது. ''பணக்காரன் தூங்கினாலும் ஏழைகளின் தூக்கம் மிக மிகக் குறைவு என்பதை அறிவாயாக''

## அரபுக் கவிதைகளின் அமைப்பியல்

அரேபியக் கவிதைகளை ஆய்வு செய்யும்போது அதன் அமைப்பியலை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

**சொற்கள்**

அதிகமான சொற்கள் கடுமையான, அழுத்தமானவையாக இருப்பதோடு அவற்றில் மென்மையைக் காணமுடியாதுள்ளது. இவை அவர்களின் வாழ்க்கை அமைப்புக்களிலிருந்து தோற்றம் பெற்றிருக்க முடியும். இங்கு பயன்படுத்தப்படும் சொற்களில் தவறுகள், வேற்று மொழிச்சொற்கள் இடம் பெறுவதில்லை. அத்தோடு அவை செயற்கையான அழகு, பாவனைக்குக் கஷ்டமான சொற்கள் என்பவற்றையும் கொண்டிருப்பதில்லை. பாரிய கருத்துக்களை சில சொற்களில் தெளிவுபடுத்தும் வளம் மிக்க சொற்களைக் கொண்டவையாக இருக்கும்.

**பொருள்**

கவிதைகளினுடைய பொருள் வீணான, அளவு கடந்த விடயங்களைக் குறிப்பிடாது இருப்பதோடு சிக்கலான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் ஒரு சொல்லின் கருத்தை அறியும்போது அவற்றை விளங்க முடியுமாக இருக்கும். அதன் வரிகள் கவிதை அமைப்பை பேணும் விதமாகவே அமைந்திருக்கும். கருத்துக்கள் அனைத்தும் நாட்டுப் புறச் சூழலிலிருந்து பெறப்பட்டவையாக இருப்பதோடு ஒரே நேரத்தில் பல விதமான அம்சங்களை இலகுவாக வர்ணிக்கும் தன்மையைக் கொண்டிருக்கும்

**கற்பனைத் திறன்**

அரபிகளின் நுட்பத்தை வெளிப்படுத்தும் வகையில் செழிப்பான கற்பனை வளத்தைக் கொண்டிருப்பதோடு அதிகமான காட்சிகள் நாட்டுப் புறச்சூழலைப் பிரதிபலிப்பதாக இருக்கும். இக்கவிதைகளில் காணப்படும் வர்ணிப்புக்கள் ஒன்றோடொன்று கலந்து கஷ்டமானதாக இருக்காது.

**கவிதை அமைப்பு**

பொதுவாக அரேபியக் கவிதைகளை நோக்கும் போது அதன் வரிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாகக் காணப்பட்டாலும் விமர்சகர்கள் அவற்றிற்கிடையேயான தொடர்புகளைத் தெளிவாக விளக்கியுள்ளனர். இவை முக்கிய மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். முதற்பகுதி ‘நஸிப்’ அல்லது ‘புகாஉத்தியார்’ என்றும் நடுப்பகுதி ‘மதீஹ்’ என்றும் இறுதிப்பகுதி ‘காதம்’ என்றும் அழைக்கப்படும். கூறப்படுகின்ற உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

## அரபுக் கவிதைகளின் பண்புகள்

### பெருமை, வீரம்

அரேபிய மக்களுக்கு மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகளும் கோத்திரச் சண்டைகளும் ஒரு இறுக்கமான வாழ்க்கையை அவர்களுக்கு மத்தியில் தோற்றுவித்திருந்தது. அவர்களின் வாழ்க்கை, கருத்து முரண்பாடு, கோத்திர நலன், போர்க்கள நடவடிக்கைகள் என்பவற்றுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்ததால் கோத்திரத்தின் நலனை வளர்க்கவும் பேணவும் கவிஞர்கள் தம் கோத்திரத்தவர்களின் துணிவு, வீரம், கொடை, உண்மை பேசுதல், கற்பு, போரில் காட்டிய திறமைகள் என்பவற்றை கவிதைகளில் எடுத்துக்காட்டி பெருமையாகப் பாடினர்

### வசை பாடல் அல்லது இகழ்தல்

இதுவும் யுத்தத்தின் விளைவாலும் கோத்திர வெறியாலும் ஏற்பட்ட ஒன்றாகும். ஆனால் அவர்கள் ஏசும் போது தரம் குறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தாது கண்ணியமான முறையிலேயே நடந்துகொண்டார்கள். எனவேதான் பகைக்கோத்திரத்தாரின் இயலாமையை, கோழைத்தனத்தை சுட்டிக்காட்டி வசை பாடுவதில் அவர்கள் வல்லவர்களாக இருந்தனர்.

### காதல்

இது அரேபியக் கவிதைகளில் மிக முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்ட ஒரு பகுதி எனலாம். காதல் பற்றிக் குறிப்பிடாத கவிதைகளைக் காண்பதே அரிது. பாலைவனச் சூழலில் பயணத்தை வாழ்க்கையாகக் கொண்ட அவர்கள் பசுமை மிக்க புல்வெளிகளை நாடி தமது கோத்திரம் செல்லும் போது காதலர்களும் தம் கோத்திரத்துடன் தமது காதலிகளைப் பிரிந்து செல்வதனால் பிரிவுத்துயரை அனுபவித்தனர்.

பாலைவனத்தில் பூந்தோட்டங்களோ, கண்ணைக் குளிரவைக்கும் காட்சிகளோ, ஆறுகளோ இல்லையாதலால் பெண்களே கண்ணை குளிரச் செய்யும் அழகிகளாக இருந்தனர். எனவே, பெண்களை வர்ணித்தும் காதல் நினைவுகளை மீட்டியும் கவிதைகளை இயற்றிப் பாடினர். மேலும் அவர்களை கற்புடையவர்களாகவும் கண்ணியமுடையவர்களாகவும், நற்குணமுடையவர்களாகவும் சித்தரித்து பாடினர். இதில் ‘‘இம்ரஉல் கைஸ்’’ போன்ற சில கவிஞர்கள் அளவு கடந்து சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வர்ணனை

அரேபியரது நாட்டுப்புற, நாடோடி வாழ்க்கை முறையை முழுமையாக சித்தரிக்கும் வண்ணம் கவிதைகள் உள்ளன. புலனுணர்வுக்குத் தென்படக்கூடிய விடயங்களை இலகுவாகவும், நுணுக்கமாகவும் வர்ணிப்பர். இதில் அவர்கள் அன்றாடம் காண்கின்ற பாலைவனம், மலைகள், குறுந் தெருக்கள், நட்சத்திரம், சூரியன், சந்திரன், ஒட்டகம், மழை, வெயில், வேட்டையாடும் போதும் யுத்தத்தின் போதும் நிகழும் சம்பவங்கள் என்பவற்றின் மூலமே இந்த வர்ணனை இடம்பெறுகிறது.

**புகழ் பாடல்**

இவ்வகைக் கவிதைகளைப் பொதுவாக அரசவையிலுள்ள கவிஞர்களே அரசர்களைப் புகழ்ந்து பாடினர். இவர்களில் நாபிகா, அஃஷா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். எனினும் ஸுஹைர் என்பவர் அரசர்களையல்லாது பொதுவாக புகழ்ந்து பாடினார். இந்தப் புகழ்களில் அளவு கடந்து செல்கின்ற நிலை காணப்படாது உண்மைத் தன்மை காணப்பட்டது. இதனால் உமர் (றழி) அவர்கள் ஸுஹைர் என்ற கவிஞரைப் பற்றிக் குறிப்பிடும்போது "இவர் ஒருவரிடம் உள்ள உண்மையைத்தவிர வேறு எதையும் பேசமாட்டார்" என்று கூறினார்கள்.

**இரங்கட்பா அல்லது அனுதாபம் தெரிவித்தல்**

இவை பெரும்பாலும் ஒரு யுத்தத்தில் பெரும் இழப்புக்களைச் சந்திக்கின்ற போதும் தமது வீரர்களில் அதிகமானவர்களை இழக்கின்ற போதும் பாடப்படுகின்ற கவிதைகளாகும்.

**மன்னிப்புக் கோரல்**

இது ஒருவரின் வாழ்க்கை நிலைமைகளில் ஏற்படுகின்ற நிகழ்வுகளின் தாக்கமாகும். அந்நாபிஆ அத்துப்யானி என்பவரின் கவிதைகள் இவ்வகைக் கவிதைகளுக்கு மிகவும் பிரபல்யமானதாகும்.

**ஞானம்**

உண்மையான அனுபவங்களாலும் சரியான உணர்வுகளாலும் கண்ணோட்டங்களாலும் ஒருவரில் ஏற்படுகின்ற தாக்கம் கவிதைகளாக வெளிப்படுகின்றன.

## முடிவுரை

உலகிலுள்ள மிகப் பழமையான இலக்கியங்களுள் அரபு மொழியல் அமைந்துள்ள இலக்கியங்களும் அடங்கும். இம்மொழியின் அமைப்பு, பொருள் மரபு என்பன ஏனைய மொழி இலக்கியங்களிலிருந்து வேறுபடாது காட்டுகின்றன. அவற்றிலே கவிதைகள் மிக முக்கியமானவை. அவற்றின் பொருள் மரபும் அமைப்பியலும் பண்பும் பல்வேறு சூழலையும் கருத்துக்களையும் கற்பனையையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

**உசாத்துணை நூற்கள்**


1. Goldzier,I. (1971), Muslim Studies, London.
2. Juri Zaidan. (1981), History of Islamic Civilization, New Delhi.
3. அமீன், எம்.ஐ.எம். (1999), **அறேபியர் வாழ்வினிலே**, ஹெம்மாதகம, அல்ஹஸனாத் பதிப்பகம்.
4. காலிதீன், கே.எம்.எச். (2001), **இஸ்லாமிய நாகரீகம் (பாகம்-1)**, ஒலுவில்: தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
5. மார்டின் லிங்ஸ். (1983), **முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வு**, தர்கா நகர்: பூசின் டெக்ஸ்ட்.